Registered as a Newspaper

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை: ரூ 1-25

கடர் 2 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு மாசி மீ 19 உ. செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1407 றஜப் பிறை 2 (03-03-1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY சுடர் 82

தொழில் நுட்ப வகுப்புக்கள்
றேடியோ, ரெலிவிஷன், வீடியோ டெக்
புதிய பிரிவு வகுப்புக்கள்
ஆரம்பம்: 9-3-87
விபரங்களுக்கு:
எலக்ரோ டெக்னிக்கல் இன்ஸ்ரிரியூசன்.
கலவளை, சண்டிலிப்பாய்.

Electro Technical Institution
கலவளை, சண்டிலிப்பாய்
றேடியோ, ரெலிவிஷன்
புதிய பிரிவு வகுப்புக்கள்
ஆரம்பம்: 9-3-87
திங்கள், புதன், வெள்ளி
A. M. 9-30 — 11-30

# ஈழ விடுதலை இயக்கங்களை இந்தியா அங்கீகரிக்குமா?

## ஆகப்பிந்திய கடிதத்தில் சூசகமாக எச்சரிக்கையாம்

கொழும்பு, மார்ச் 3

இராணுவ நடவடிக்கைகள் தொடருமானால் விடுதலை அமைப்புக்களை அங்கீகரிக்கும் நடவடிக்கை எடுக்கப்படலாம் என்பதை ராஜ தந்திர மொழியில் இந்தியா, இலங்கை அரசுக்கு கூறியுள்ளதா?

இந்தியா ஆகப்பிந்தி இலங்கைக்கு அனுப்பிய கடிதத்தில் இதனை சூசகமாகத் தெரிவித்து இருப்பதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் அபிப்பிராயப்படுகின்றன.

தமிழர் மீதான இலங்கை அரசின் இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்து இந்திய அரசு கடந்த மாதம் 9 ஆம் திகதி 3 அம்சக் கடிதம் ஒன்றை இலங்கைக்கு அனுப்பியிருந்தது.

அதற்குப் பதிலாக 18 ஆம் திகதி ஜனாதிபதி திரு. ஜெயவர்த்தனா 6 அம்ச நிபந்தனைகளுடன் கூடிய பதிலை அனுப்பினார்.

இப்பதிலுக்குப் பதிலாக இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அனுப்பிய ஆகப் பிந்திய கடிதத்தில் 'ராஜதந்திரப் பயமுறுத்தல்' ஒன்று விடுக்கப்பட்டுள்ளதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன.

இராணுவ நடவடிக்கை தொடர்ந்தால் ஈழ விடுதலை அமைப்புக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முனி



ராஜீவ் அப்ப தன்ரை துரும்புச் சீட்டை போட்டுப் பாக்கிறார் பின்னை...! உவர் உத்தமர் ஓடி முழிச்சு எதிர்க் கட்சியளோடை அன் பொழுக பேசினதின்ரை சூட்சுமம் விளங்குது இப்ப..!

## பெண் பலி!

யாழ்ப்பாணம், மார்ச் 3

வீட்டு வளவினுள் கிடந்த குண்டு வெடித்ததால் பெண் ஒருவர் இரண்டு கால்களும் சிதறிய நிலையில் மரணமானார்.

நேற்று மாலை 5 மணி அளவில் குரும்பசிட்டிப் பகுதியில் இச்சம்பவம் நடந்தது.

தம்பியப்பா பாக்கியலட்சுமி (47 வயது) என்ற பெண்ணே மரணமானவர்

இப் பெண் குரும்பசிட்டியில் உள்ள தனது வீட்டைப் பார்ப்பதற்குச் சென்ற பொழுது வீட்டு வளவினுள் கிடந்தகுண்டு வெடித்தது. (இ-10)

இனப்பிரச்சினை நெருக்கடியின் விளைவு

# ஜே. ஆர் - சிறிமா நேற்று சந்தித்துப் பேச்சு

கொழும்பு, மார்ச் 3

மாலைதீவு புறப்படும் முன்னர் ஜனாதிபதி ஜெயவர்த்தனா, சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டார நாயக்காவை அழைத்து பேச்சுக்கள் நடத்தினார்

நண்பகலுக்குப் பின்னர் நடந்த இப்பேச்சுக்கள் ஒரு மணித்தியாலம் வரை நீடித்தன

திருமதி பண்டார நாயக்காவுடன் எதிர்க் கட்சித் தலைவர் அனுரா பண்டாரநாயக்கா, கட்சிப் பொதுச் செயலாளர் சோமஸ்ரீ தஸநாயக்கா, மற்றும் ஜனாப் ஹலீம் இஷாக் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதியுடன் அமைச்சர்கள் சாகுல் ஹமீது, லலித் அத்துலத் முதலி ஆகியோர் கூட இருந்தனர்.

இந்தியப் பிரதமரின் 3 அம்சக் கடிதம்—

கடந்த மாதம் 13 ஆம் திகதி நான் அனுப்பிய 6 அம்சப் பதில்—

அதன் பின்னர் இலங்கை—இந்திய உறவில் ஏற்பட்டுள்ள மாற்றம் ஆகியன பற்றி ஜனாதிபதி, சுதந்திரக் கட்சித் தலைவிக்கு விவரமாக எடுத்துரைத்தார்

இனப்பிரச்சினைப் பேச்சுக்கள் குறித்து திருமதி

(4 ஆம் பக்கம் பார்க்க)

# அடகு நகைகளை வழங்க பாதுகாப்புச்சபை பணிப்பு

## மறியலைக் கைவிட அரச அதிபர் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 3

வடக்கில் மக்கள் வங்கிக் கிளைகளில் அடகு வைத்தோரின் நகைகளை உடனடியாக மீளளிப்பதற்கான நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ளும்படி பாதுகாப்புச்சபைக் கூட்டத்தில் மக்கள் வங்கி உயரதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது

யாழ். அரச அதிபர் திரு. வை. மு பஞ்சலிங்கம் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் இத்தவல் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அந்த அறிக்கையின் சாராம்சம் வருமாறு:-

அடகு வைத்தோர் சங்கத்தின் கோரிக்கைகள் தொடர்பாக கொழும்பில் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு லலித் அத்துலத் முதலி, அமைச்சின் செயலாளர் ஜெனரல் சேபால ஆட்டிகல, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹப்புதெனிய. மக்கள் வங்கித் தலைவர், அதன் பாதுகாப்புச் சேவை அதிபர் விடான்வி சேனநாயக்கா ஆகியோருடன் சென்ற மாத மத்தியில் சந்தித்துப் பேசினேன்.

பாதுகாப்பு, வங்கி அதிகாரிகள் தந்த அனுமதிக் கடிதத்துடன் யாழ் திரும்பி நிலைமையை அடகு வைத்தோர் சங்கத்திற்கு விளக்கினேன்

மறியற்போரை கைவிடும்படி கேட்டேன். ஆனால், கைவிடப்படவில்லை.

இந்த விடயம் தொடர்பாக எழுந்துள்ள நிலை குறித்து உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் திரு. கே. டபிள்யூ. தேவநாயகம், நிதி அமைச்சர் திரு. ரொனி டி மெல்லுடன் தொடர்புகொண்டு விளக்கினேன்.

இதையடுத்து திங்கட்கிழமை நடைபெற்ற பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் துரித நடவடிக்கை எடுக்கும்படி மக்கள் வங்கி பிரதி முகாமையாளருக்கும், அதன் பாது

(4 ஆம் பக்கம் பார்க்க)

செயலகம் முன்பாக

# அடகு வைத்தோர் — ஓய்வூதியர் நேற்றுக் கருத்துக் கலகம்!

யாழ்ப்பாணம், மார்ச் 3

அடகு வைத்தோர் சங்கத்தினர் நேற்று யாழ் செயலகம் முன்பாக மறியற்போர் நடத்திக் கொண்டிருந்த வேளையில், வடமாநில ஓய்வூதியர் சேமநலச் சங்க உறுப்பினர்கள் அங்கு ஊர்வலமாகச் சென்று செயலகத்தினுள் உட்புக முயற்சித்தனர்.

செயலக வாசலில் இரு சங்கங்களின் பிரதிநிதிகளுக்கும் இடையில் கருத்துக் கலகம் (வாக்கு வாதம்) நடைபெற்றதாயினும் பின்னர் இரு தரப்பினரும் ஒரு முடிவுக்கு வந்ததாகத் தெரிகிறது

இதனையடுத்து ஓய்வூதியர் சேமநலச் சங்க உறுப்பினர்கள் கலைந்து சென்றனர்.

மக்கள்வங்கிக் கிளைகளில் அடகு வைக்கப் பட்ட நகைகளை மீளப் பெறுவதற்காக மக்கள் வங்கிக்கிளைகள், செயலகம் உட்பட பல அரச அலுவலகங்களுக்கு முன்னால் அடகு வைத்தோர் சங்கம் மறியற்போர் நடத்தி வருகிறது என்பதும்—

இதனால் ஓய்வூதியம் பெறுவோர் ஓய்வூதியம் பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்பதும் தெரிந்ததே.

நேற்றைய சம்பவம் குறித்து ஓய்வூதியர் சங்கம்விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ஓய்வூதியர்கள் தங்களது ஓய்வூதியத்தை எடுக்கமுடியாத நிலையையிட்டு யாழ் புகையிரத நிலையத்தில் நேற்று ஒன்று கூடிய போது யாழ் கச்சேரிக்குள் உட்புகுவது எனத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

அதன்படி ஓய்வூதியர்கள் கச்சேரி நுழைவாயில் மூலம் உட்புகுந்தார்கள்.

மறியல் செய்யும்

(4 ஆம் பக்கம் பார்க்க)



யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு, அனுராதபுரம், திருகோணமலை ஆகிய இடங்களுக்கான பஸ் சேவைகள் முதலாம் திகதி யாழ் பஸ் நிலையத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படம். போக்குவரத்துச் சபைத் தலைவர் திரு. எஸ் கனகரத்தினம் பயணி ஒருவருக்கு முதல் ரிக்கட் விநியோகித்து பஸ் சேவையினை ஆரம்பித்து வைக்கின்றார். (உ)

கவச வாகனத்தை மீட்க முடியவில்லை!

# ஞானோதய வித்தியாலயத்தில் இராணுவம் நிலைகொண்டது

பலாலி, மார்ச் 3

கட்டுவன் ஞானோதய வித்தியாலயத்தில் மினி முகாம் அமைக்கும் முயற்சியில் இராணுவத்தினர் நிலைகொண்டுள்ளனர்.

வறுத்தலைவிளான் பிள்ளையார் கோவிலுக்கும் ஞானோதய வித்தியாலயத்துக்கும் இடையில் புலிகளின் தாக்குதலால் செயலிழந்தவாறு கிடக்கும் கவசவாகனத்தை இன்னமும் சிப்பாய்களால் மீட்கமுடியவில்லை அந்த இடத்தை நோக்கி விடுதலைப் புலிகள் தாக்குதலை மேற்கொண்டு வருகின்றனர்

புதையுண்ட கவசவாகனத்தை விட்டுச்செல்ல முடியாத நிலையிலேயே ஞானோதய வித்தியாலயத்தில் இராணுவ முகாம் அமைக்கும் முயற்சியில் அவர்கள் நிலைகொண்டுள்ளனர் எனத் தெரிகிறது.

கட்டுவனுக்கு வடக்காக மயிலிட்டிப் பகுதி ஊடாகவுள்ள கடற்கரையைத் தமது பாதுகாப்புக்கு இலகுவான பகுதியாகக் கொண்டு ஹெலிக்கொப்டரின் உதவியுடன் தெல்லிப்பளைப் பகுதிக்கு இராணுவம் முன்னேற முயற்சிப்பதாகவும் கூறப்படுகிறது.

இதனை முறியடிக்க புலிகள் மிக ஆயத்த நிலையில் அப்பகுதியில் நிலைகொண்டுள்ளனர். (இ-119)

## சுபநேரம்

03—03—1987

செவ்வாய்க்கிழமை

சுபநேரம்: 10-57 முதல் 12-27 வரை

ராகுகாலம்: 3-27 முதல் 4-57 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

சதுர்த்தி விரதம்

## காயமுற்றவர்

யாழ்ப்பாணம், மார்ச் 3

வலிகாமம் வடக்கில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற ஹெலித் தாக்குதலில் காயமடைந்தவர்களில் ஒருவரான பூபாலசிங்கம் பரமேஸ்வரன் (51 வயது) ஓர் அரசாங்க உத்தியோகஸ்தர் ஆவார்.

அவர் கிளிநொச்சி மாவட்டக் கச்சேரி, காணிக்கிளையில் பணிபுரிபவர். தெல்லிப்பளை அரசாங்க வைத்தியசாலைக்குச் சமீபமாக உள்ள தமது வீட்டுக்குத் திரும்பும்போது ஹெலித் தாக்குதலுக்கு ஆளானார்.

1-3-87 உதயனில் இப்பத்திரித் தகவல்களை வைத்து அவரது பெயருக்குக் கீழே குறிப்பிடப்பட்ட தொழில் விபரம் தவறானதாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது (அ)

# பிரசைகள் குழு அலுவலகத்தில் ஆயுதப் படையினர் அட்டகாசம்

திருகோணமலை, மார்ச் 3

திருகோணமலை பிரசைகள் குழு அலுவலகத்தினுள் கடந்த 23ஆம் திகதி புகுந்த சீருடை அணிந்த ஆயுதப்படைக் குழு தளபாடங்களை அடித்து நொருக்கியது தஸ்தாவேஜுகள், பைல்கள் சேதமாக்கப்பட்டன.

பின்னர் பிரசைகள் குழுவின் பொருளாளரான திரு. இ. கணேசலிங்கத்தையும் கைது செய்து அழைத்துச் சென்றனர்.

இது பற்றிய விவரம் வருமாறு:

கடந்த 23ஆம் திகதி இரவு 7-30 மணியளவில் ஐவர் அடங்கிய கோஷ்டி பிரசைகள் குழு அலுவலகத்தினுள் புகுந்தது.

திருமலை பிரதான வீதியில் குழுத் தலைவரான திரு க சிவபாலனின் இல்லத்திலதான் இந்த அலுவலகம் உள்ளது.

உள்ளே புகுந்த கோஷ்டியில் இரண்டு பேர் சீருடையிலும் மற்ற 3 பேர் சிவிலிலும் இருந்தனர்.

இரவு 10 மணி வரை

(4 ஆம் பக்கம் பார்க்க)

# ஜே. ஆரின் பேச்சில் நம்பகத் தன்மை குறைவு

## 'இந்து' நாளிதழின் தலையங்கம்

புதுடில்லி, மார்ச். 2

ஜனாதிபதி ஜெயவர்த்தனாவின் நாடாளுமன்ற உரையில், அடிப்படை நம்பகத்தன்மையே குறைந்து காணப்படுவதாக 'இந்து' நாளிதழ் தனது ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவித்தது.

'இந்து' தனது கடந்த 24 ஆம் திகதி இதழில் 'கொழும்பிலிருந்து வந்த ஏற்க முடியாத பதில்' என்ற தலைப்பில் பிரதான ஆசிரியர் தலையங்கம் ஒன்றை எழுதியது

அந்தத் தலையங்கத்தில்தான் மேற்கண்ட கருத்து வெளியிடப்பட்டுள்ளது

நாடாளுமன்றத்தில் உரை நிகழ்த்துகையில், "குடிமக்களுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளை எனது அரசு ஒருபோதும் மேற்கொள்ளவில்லை; மேற்கொள்ளவும் மாட்டாது"— என்று கூறியிருந்தார்.

இக்கூற்றில் அடிப்படை நம்பகத்தன்மையே குறைந்துகாணப்படுகின்றது

தமிழர் மீதான இராணுவ நடவடிக்கை என்ற முடிவு குறித்து தினமும் பொதுசன தொடர்பு சாதனங்களில் வெட்கங்கெட்ட முறையில் அரசியல், சமூக, உளரீதியிலான அர்த்தங்களுடன் விளம்பரப்படுத்தப்பட்டு வருகிறது.

(4ஆம் பக்கம் பார்க்க)

# ஊர்காவலரை விரட்டிய எம்.பி!

மட்டக்களப்பு, மார்ச் 3

தமக்கு பாதுகாப்பு வழங்க வந்த ஊர்காவல் படையினரைப் போகுமாறு தரத்திய நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் "ஆயுதங்களைப் பறித்து அவர்களை விரட்டுங்கள்" என்று பொது மக்களைக் கேட்டுக் கொண்டார்.

மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாப். அகமத் ரிஸ்வி சின்னலெப்பைதான் ஊர்காவலர் படையினரை விரட்டியவர் ஆவார்.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது;-

காத்தான்குடியில் பிரஸ்தாப நாடாளுமன்ற உறுப்பினரின் லண்டன் விஜயத்தைக் கௌரவிப்பதற்காக ஊர்ப் பொது மக்களால் மாபெரும் விழா ஒன்று எடுக்கப்பட்டது.

விழாவில் முஸ்லிம் அரசியல் பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

காத்தான்குடி 6 ஆம் குறிச்சி எல்லையிலிருந்து திறந்த ஜீப்பில் ஜனாப் அகமத்ரிஸ்வி சின்னலெப்பை ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார்.

1 ஆம் குறிச்சியில் ஊர்காவல் படையினர் ஆயுதம் சகிதம் மக்களை கட்டுப்படுத்துவதை அவதானித்த அவர், "உங்களை யார் இங்கு பாதுகாப்புக்கு வரச் சொன்னது? நீங்கள் போகலாம்" என்றார்

அவ்வளவுதான் உடனே பொது மக்கள் "கூய்"...... "கூய்"...... போட ஊர்காவல் படையினர் அங்கிருந்து நழுவிச் சென்றனர். (இ-21)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ சின்னஞ் சிறு விளம்பரங்கள் ★

## தேவை

தனியார் வைத்திய நிலையத்தில் வேலை செய்வதற்கு உதவி வைத்தியர் (R. M P) தேவை. ஒய்வு பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம். ராஜ் டிஸ்பென்சரி, முல்லைத்தீவு வீதி, புதுக்குடியிருப்பு

## சேவை

தினசரி எங்களுடைய ஸ்தாபனம் இரவு 8 45 வரை திறந்திருக்குமென அறியத் தருகின்றோம். யாழ் சைனீஸ் றெஸ்ரோறன்ற் 124,( RR நல்லையா வீதி முதலாம் குறுக்குத்தெரு). யாழ்ப்பாணம். தொலைபேசி 23460

## வைத்தியம்

சிரங்கு, கடி, தோல் வியாதி, தொய்வு, நீரிழிவு, கட்டிகள், நரம்புத் தளர்ச்சி, உடல் மெலிவு, ஆண்தன்மை குறைவு, இளம்பிள்ளைவாதம், வாதம் அல்லது வேறு அடிபட்ட காரணத்தால் நடக்கமுடியாதிருந்தால் குணப்படுத்தலாம். வைத்தியர், ராஜ் டிஸ்பென்சரி, முல்லைத்தீவு வீதி, புதுக்குடியிருப்பு


செயலக மறியலை அடுத்து

# உணவுப் பொருள்கள் பங்கீட்டு முறையில்

## அச்சுவேலியில் நடவடிக்கை

அச்சுவேலி, மார்ச் 3

அச்சுவேலி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் பாவனையாளர்களுக்கான உணவுப் பொருள்களை குடும்ப அடிப்படையில் உணவுப் பங்கீட்டு அட்டைக்கு விநியோகிக்க முடிவு செய்திருக்கிறது.

அரசாங்க செயலகத்திற்கு முன்னால் தொடர்ந்து நடைபெறும் மறியல் போராட்டத்தால் யாழ் மாவட்ட உணவுக் களஞ்சியத்தில் இருந்து வழமைபோல உணவுப் பொருள்களை பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

உணவுப் பொருள்களைப் பெற்றுக் கொள்ள முடியாமையினால் கையிருப்பில் இருக்கும் உணவுப் பொருள்களை எல்லாப் பாவனையாளருக்கும் சமமாக கிடைக்கச் செய்வதற்கு வசதியாக பங்கீட்டு அடிப்படையில் அவற்றை விநியோகிக்கப்படவுள்ளது.

அரிசி, மாவு, சீனி போன்ற உணவுப் பொருட்களை பங்கீட்டு அடிப்படையில் விற்பனை செய்யுமாறு பொது முகாமையாளர் கிளை நிலையங்களுக்கு அறிவித்துள்ளார். (இ-11

## கொன்கிறீட் தூண் இல்லை

ஊர்காவற்றுறை, மார்ச் 3

இலங்கை மின்சார சபையின் வேலணைப் பிராந்திய டிப்போவில் கொன்கிறீட் தூண்கள் இல்லாததால் புதிய மின் இணைப்புக்களுக்காக விண்ணப்பித்துள்ள பலர் தங்கள் மின்சார இணைப்புக்களைப் பெற முடியாதுள்ளனர்.

தீவுப்பகுதிக்குரிய பாதைப் போக்குவரத்து பண்ணையூடாக நடைபெற்றபோது யாழ்ப்பாண ஒப்பந்தக்காரரால் வழங்கப்பட்ட கொன்கிறீட் மின் தூண்களே இவ்வளவு நாட்களும் களஞ்சியத்திலிருந்து வழங்கி வந்ததாகவும் அவை தற்போது முடிந்து விட்டதால் இப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகவும் மின்சார சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-16)

## வைத்திய மாணவர் ஒன்றியத்தின் புதிய பாரம்பரியத்திற்குப் பாராட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 3

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வைத்திய மாணவர் மன்றம் தனக்கெனப் புதிய பாரம்பரியம் ஒன்றை உருவாக்கி வளர்த்து வருவது பாராட்டத்தக்கது.

ஏனைய பல்கலைக்கழக வைத்திய மாணவர் சங்கங்கள் நடத்தும் நிகழ்ச்சிகளை விடப் புதிய பாணியில் நிகழ்ச்சிகளை நடத்துவதை இங்கு அவதானிக்க முடிகின்றது.

இவ்வாறு யாழ். பல்கலைக்கழக வைத்திய மாணவர் ஒன்றிய ஆதரவில் நடைபெற்ற "மெடிக் சோஸ் வீக்" வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட டாக்டர் ஆர். கணேசமூர்த்தி தெரிவித்தார்.

இவ்வைபவம் ஷ்ரூ யுனிக்கோ நிதி நிறுவனத்தினரின் ஆதரவில் வைத்திய பீட மண்டபத்தில் ஞாயிறுமாலை நடைபெற்றது.

டாக்டர் கணேசமூர்த்தி தமது உரையில் "மெடிக்சோஸ் வீக்" போன்ற நிகழ்ச்சிகள் மாணவர் மத்தியில் சகோதர சகவாழ்வையும் தலைமைத்துவத்தையும் வளர்க்கப் பெரிதும் உதவும்" என்றும் குறிப்பிட்டார்.

பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன், மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் சி. சிவஞானசுந்தரம் ஆகியோரும் உரையாற்றினர்.

விழாவை ஒட்டி நடைபெற்ற போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு திருமதி கணேசமூர்த்தி பரிசில்கள் வழங்கினர்.

மருத்துவபீட மாணவர் ஒன்றியத்தின் தலைவர் திரு. சங்கரதாஸ் நிமலன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (அ-5)

## விளையாட்டரங்கு

### இல்ல விளையாட்டுப் போட்டி

#### உடுப்பிட்டியில்

உடுப்பிட்டி, மார்ச் 3

உடுப்பிட்டி பெண்கள் பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி நாளை 4 ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது.

நெல்லியடி கோட்டக் கல்வி அதிகாரி திரு. வே. தங்கராசா பிரதம விருந்தினராகவும் கல்வி அதிகாரி திரு. வீ. கே. ஈஸ்வரபாதம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வார்கள்.

வெற்றி பெறும் வீரர்களுக்கு திருமதி புவனநாயகி தங்கராசா பரிசில்களை வழங்குவார். (இ-157)

#### புத்தகலட்டியில்

அச்சுவேலி, மார்ச் 3

புத்தகலட்டி ஸ்ரீவிஷ்ணு வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று 3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறும்.

அதிபர் திரு க. மணிசுந்தரம் தலைமையில் நடைபெறும் இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராக பிரதம கல்வி அதிகாரி திரு. கே. கந்தசாமி கலந்து கொள்கிறார். (இ-11)

#### கன்னாகத்தில்

கன்னாகம், மார்ச் 3

கன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் 7ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

கல்வி அதிகாரி திரு. சி. புலேந்திரன் பிரதம விருந்தினராகப் பங்கு கொள்கிறார். திருமதி இருபராணி புலேந்திரன் பரிசில்களை வழங்குவார். (இ-27)



யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்துக்கு முன்னாள் அதிபர் திரு. சோமசுந்தரம் குடும்பத்தவர்கள் கிரிக்கெட் உபகரணங்களை அண்மையில் அன்பளிப்புச் செய்தனர்.

உடற்கல்வி அதிகாரி திரு. வி. கணேசலிங்கம் மாணவர் தலைவர் செல்வன் சுமந்திரனிடம் விளையாட்டு உபகரணங்களைக் கையளிப்பதைப் படத்தில் காணலாம்.

கலாநிதி எஸ். மோகனதாஸ் வித்தியாலய அதிபர் திரு. இராமலிங்கம், திரு. சோமசுந்தரம், கணேசசுந்தரம் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். (இ)

## கல்வித் தினம்

சாவகச்சேரி, மார்ச் 3

சாவகச்சேரி கல்விக் கோட்டார உடற்பயிற்சிக் கல்வித்தினம் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவிருக்கிறது.

சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயத்தில் கல்வி அதிகாரி திரு. அ. தங்கராசா தலைமையில் நடைபெறும். இவ்வைபவத்தில் கல்வி அதிகாரி திரு சி. கணேசலிங்கம் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார் (உ-31)

## யாழ் மாவட்டத்தில் பணிபுரியும்

# கிளிநொச்சி ஆஸ்பத்திரி ஊழியர்களுக்கு அழைப்பு

பலாலி, மார்ச் 3

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளில் கடமை புரியும் கிளிநொச்சி வைத்தியசாலை ஊழியர்கள் உடனடியாக கிளிநொச்சி வைத்தியசாலையில் வேலைக்கு சமுகமளிக்க வேண்டுமென மேலிடம் அறிவித்துள்ளதாகத் தெரியவருகிறது.

கிளிநொச்சி பொலீஸ்-இராணுவ கூட்டுமுகாமிற்கு அண்மையில் இந்த ஆஸ்பத்திரி அமைந்திருந்தபடியால் அது அங்கு இயங்கமுடியாத நிலை இருந்தது.

இதனால் அங்கு போகாமல் யாழ்ப்பாணத்துக்குச் சென்று கடமையாற்றிய ஊழியர்கள் இவ் அறிவித்தலைத் தொடர்ந்து பீதியடைந்துள்ளனர்.

சில வைத்தியசாலைகளுக்கு இவ்வாறு தற்காலிகமாக இடமாற்றம் பெற்றுவந்த ஊழியர்களை கிளிநொச்சி வைத்தியசாலைக்கு திருப்பி அனுப்புமாறு சுற்று நிருபம்மூலம் அறிவிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது (எ-119)

## வடபகுதி வங்கிகள்

# நாணய மாற்று விகிதம் பெறுவதில் சிக்கல்

## வாடிக்கையாளர் சிரமம்

கொக்குவில், மார்ச்.3

அந்நிய நாணயமாற்று விகிதம் உரிய நேரத்தில் அறிய முடியாததால், இலங்கை வங்கி யாழ்ப்பாணக் கிளை வெளிநாட்டுப் பிரிவில் வாடிக்கையாளர்கள் திருப்பி அனுப்பப்படுகின்றனர்.

இவர்கள் தமது வெளிநாட்டுக் காசோலைகளை மாற்ற மீண்டும் ஒரு நாள் அலையவேண்டிய நிலை ஏற்படுகின்றது.

எரிபொருள் தட்டுப்பாட்டினால் பஸ் சேவை குறைந்துள்ள இன்றைய நிலையில் தூர இடத்திலிருந்து வங்கிக்கு வரும் வாடிக்கையாளர்கள் பல சிரமங்களுக்குள்ளாக வேண்டியுள்ளது.

முன்பு நாணய மாற்றுவிகிதம் கொழும்பிலிருந்து நேரடியாக தொலைபேசி மூலம் யாழ் வங்கிக்கு அறிவிக்கப்பட்டுவந்தது.

யாழ்ப்பாணத்திற்கான தொலைபேசிச் சேவை துண்டிக்கப்பட்டுள்ளதால் இப்பொழுது நேரடியாக கொழும்பிலிருந்து நாணயமாற்று விகிதம் பெறப்படுவதில்லை.

கொழும்பிலிருந்து வவுனியா இலங்கை வங்கிக் கிளைக்கு அறிவிக்கப்பட்டு அங்கிருந்து பஸ் மூலம் யாழ் கிளைக்கு அறிவிக்கப்படுகிறது.

பஸ்சேவை பாதிக்கப்படும்போது வங்கிச் சேவையும் பாதிக்கப்படுகிறது.

அந்நிய நாணய மாற்று விகிதம் ஒரு முறை கொழும்பிலிருந்து அறிவிக்கப்பட்டால் அது இரண்டு நாட்களுக்குமட்டுமே செல்லுபடியாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-69)

# "அமைதி, ஆசீர்வாதம் பெற இறைவனின் கீதங்கள்"

மானிப்பாய், மார்ச் 3

காலத்துக்குக் காலம் பக்தர்கள் இன்னிசைப் பாடல்களை ஆக்கி இறைவனுக்கு அளித்துள்ளனர். இப்பாடல்கள் மக்களின் வாழ்க்கையிலும் கடவுள் வழிகாட்டிலும் பின்னிப் பிணைந்துள்ளன-துன்பமான - சோகமான வேளைகளில் இவைகளைப் பாடுவதன் மூலம் மன அமைதியும் கடவுளின் ஆசீர்வாதமும் கிடைக்கிறது

உடுவில் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற பேசுவின் கீதங்களும் இனிய பாடல்களும் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்து உரையாற்றிய கல்லூரி அதிபர் செல்வி செல்லையா இவ்வாறு கூறினார்

கிறிஸ்தவ திருச்சபையின் ஆதரவில் கிறிஸ்தவப் பாடல்களை இசைத்தட்டு நாடாக்களில் பதிவு செய்யும் நோக்குடன் நடத்தப்பட்ட இந்நிகழ்ச்சியை சங்கீத வித்துவான் திரு ஆர் சந்தான கிருஷ்ணன் நெறிப்படுத்தினார்.

கல்லூரி அதிபர் செல்வி செல்லையா மேலும் பேசுகையில்:-

ஆதிகாலம் தொட்டு கடவுள் வழிபாட்டில் இசை முக்கிய இடத்தை வகிக்கிறது உளம் சிந்து பாடும் பாடல்கள் மக்களை பரவசத்தில் ஆழ்த்துகின்றன என்றார். (உ-90)

# மனித உரிமைகள் திட்ட இயக்குநர் இலங்கை வருகை

கொழும்பு, மார்ச் 3

மனித உரிமைகள் திட்ட இயக்குநரும் ஹவார்ட் பல்கலைக்கழக சட்டப் பேராசிரியருமான திரு. ஹென்றி ஜே ஸ்ரீன்னர் கடந்த சனிக்கிழமை கொழும்பு வந்து சேர்ந்தார்

இந்திய பயணத்தை முடித்துக் கொண்ட பின்னர் இவர் இலங்கை வந்துள்ளார்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுத் தலைவர் டாக்டர் ஜே. ஏ. எல். கூரே, அமைச்சர்கள் லலித் அத்துலத்முதலி, காமினி திஸநாயகா, நீசங்க விஜயரத்ன, அரசியல் கட்சித் தலைவர்களான டாக்டர் கொல்வின் ஆர் டி சில்வா, பீட்டர் கெனமன், அனுரா பண்டாரநாயக்கா, அஸ்ஸிரிய மகாநாயக்கதேரர் ஆகியோரையும் இவர் சந்திப்பார்

எதிர்வரும் வியாழன் இலங்கை மன்றக் கல்லூரியில் 'சர்வதேச மனித உரிமைகள்' பற்றிப் பேசுவார். (இ-எ)

# இவ்வாண்டு முடிவிற்குள் சகல பாடசாலைகளும் கொத்தணி அமைப்பின் கீழ்

## கல்விப் பணிப்பாளர் கூறுகிறார்

அச்சுவேலி, மார்ச்.3

யாழ் மாவட்டத்தில் உள்ள சகல பாடசாலைகளும் 1987 ஆம் ஆண்டு முடிவதற்கு முன்பு கொத்தணி அமைப்பின் கீழ் செயற்படும், 1988 ஆம் ஆண்டு தொடக்கத்தில் கொத்தணியும் கோட்டக்கல்வி அலுவலகமும் பூரணமாக செயற்படும்' —இவ்வாறு கூறினார் யாழ்மாவட்ட கல்விப் பணிப்பாளர் ஜனாப். எம் எம். மன்சூர்.

கோப்பாய் கல்வி வட்டாரப் பாடசாலை அதிபர்கள் கூட்டம் அச்சுவேலி புனித திரேசா மகளிர் வித்தியாலயத்தில் வட்டாரத்திற்கு பொறுப்பான கல்வி அதிகாரி திரு ஏ வி தங்கராசா தலைமையில் அண்மையில் நடைபெற்றது

கூட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கல்விப்பணிப்பாளர் ஜனாப் எம்.எம். மன்சூர் தொடர்ந்து உரையாற்றும் போது—

யாழ் மாவட்டம் நான்கு கோட்டக்கல்வி அலுவலகங்களின் கீழ் செயற்படவுள்ளது நெல்லியடி, மருதனாமடம், பண்டத்தரிப்பு, யாழ் மாவட்ட கல்வித் திணைக்களம் ஆகிய இடங்களில் கோட்டக் கல்வி அலுவலகங்கள் செயற்படும்.

இன்று ஆசிரியர்களுக்கு பல்வேறு பிரச்சினைகள் இருந்தபோதும் வருமானம் தொடர்பான பிரச்சினைகளுக்கே முக்கியம் கொடுத்து கல்வி அலுவலகங்களுக்கு அலைகின்றனர்.

கடன், சம்பள உயர்வு, பரீட்சைக் கடமைகள் என்பன இதில் முக்கிய இடத்தைப் பெறுகின்றன — எனக் கூறினார்.

பிரதம கல்வி அதிகாரி திரு. எம். கந்தசாமி கலந்து கொண்டு உரையாற்றினார். (உ-11)

# யாழ் பஸ் நிலையத்தின் மலசல கூடத்தை உடன் கட்டி முடிக்க வேண்டுகோள்

யாழ்ப்பாணம், மார்ச் 3

யாழ் பஸ் நிலையப் பகுதியில் கட்டி முடிக்கப்படாமல் அரை குறை நிலையில் இருக்கும் மலசல கூடத்தினை உடனடியாகக் கட்டி முடிக்க வேண்டும்.

இவ்வாறு யாழ் வர்த்தகர் சங்கம் மாநகரசபை ஆணையாளர் திரு. சி வி கே. சிவஞானத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

பஸ் நிலையப்பகுதியில் மலசல கூடங்கள் இல்லாதிருப்பதன் காரணமாக ஏராளமான மக்கள் வர்த்தக ஸ்தாபனங்களை நோக்கிப் படையெடுக்கின்றனர்.

இதன் காரணமாக வர்த்தக நிலையங்களில் சுத்தம் பேண முடியாத நிலை ஏற்படுகிறது

எனவே இந்த மலசல [illegible] உடனடியாக கட்டி முடிக்க வேண்டும் என வேண்டுகோள் [illegible] பட்டுள்ளது (உ-10)

# சமூக சேவகராகத் திகழ்ந்த அதிபர்

## அஞ்சலிக்கூட்டத்தில் உரை

யாழ்ப்பாணம், மார்ச்.3

திரு ஏ. கே. இராஜேந்திரம் ஆசிரியர் ஒரு பெரிய சமூகசேவகராகத் திகழ்ந்தார். அவர் தனது ஆசிரியத் தொழிலை சிறப்பாகச் செய்ததுபோல் ஒரு சிறந்த கிறிஸ்தவராகவும் வாழ்ந்துகாட்டினார்.

முன்னாள் ஆசிரிய கலாசாலை அதிபரும் கருணாநிலைய மேற்பார்வையாளருமான செல்வி எம். வி. ஹட்சின்ஸ் இவ்வாறு கூறினார்.

திரு ஏ. கே. இராஜேந்திரம் அதிபரின் அஞ்சலிக் கூட்டத்தில் அவர் உரையாற்றினார்.

அஞ்சலிக் கூட்டத்தில் பேசிய கிளிநொச்சி மகாவித்தியாலய அதிபர் திரு. நா. சோதிநாதன் இப்பகுதிப் பாடசாலைகளுக்கும் கல்விக்கும் திரு. ஏ. கே. இராஜேந்திரம் ஆற்றிய சேவைகளைப்பற்றியும் பேசினார்.

உருத்திரபுரம் கொத்தணி அதிபர் திரு. பொன் சபாபதி பேசுகையில் திரு. இராஜேந்திரம் கொத்தணிப்பாடசாலைகளில் ஆற்றிய சேவைகளையும் கடமை உணர்வையும் பற்றிப் புகழ்ந்துபேசினார்.

அருட்திரு செல்வரத்தினம் ஆராதனைகளை நடத்தினார். (இ)

# குறைகள் எதுவுமின்றி சேவை செய்தவர்

## பாராட்டுவிழாவில் வணபிதா

யாழ்ப்பாணம், மார்ச் 3

ஒவ்வொரு ஊழியரினதும் சேவைக்காலம் முடிவடையும்போது அவரின் சேவையை மதிப்பிடுபவர் ஒருசில குறைகளையாவது அவரிடம் காண்பது வழக்கம். ஆனால் செல்வி அருள் சத்திய நேசனின் சேவையில் எதிகுறையையும் காணமுடியாது.

யாழ்ப்பாணம் சென் பீட்டர்ஸ் தேவாலய சேகர முகாமைக் குருவான அருட்திரு. கே. பி கோவிந்தராஜ் மேற் கண்டவாறு கூறினார்.

மெதடிஸ்த திருச்சபையின் டீக்கனஸ் ஆக 53 வருடங்கள் சேவையாற்றி இளைப்பாறிய செல்வி அருள் சத்திய நேசனின் சேவைநலம் பாராட்டுவிழா அண்மையில் யாழ்ப்பாணம் இரண்டாம் குறுக்குத் தெருவில் உள்ள கிறைஸ்ட்தேவாலயமண்டபத்தில்நடைபெற்றது.

அந்த வைபவத்தில் உரையாற்றுகையிலேயே அருட் திரு கே பி கோவிந்தராஜ் மேற்கண்டவாறு கூறினார்.

திருமதி தியாகராசா உரையாற்றுகையில், எவ்வித கஷ்டங்கள் நேர்ந்த போதும்தமது கடமையே கண்ணாகச் சேவையாற்றியவர் செல்வி அருள் சத்தியநேசன் என்றார்.

சபையின் இளைஞர் குழுவினர் அவரின் சிறந்த பண்புகளைப் பாடல்களின்மூலம் எடுத்துக் கூறினார்.

திரு. ஜே. ஜி. அரசரத்தினம் உட்படப் பலரும் உரையாற்றினர். (இ-5)

## நெடுங்கேணியில் மலேரியா

நெடுங்கேணிப் பகுதியில் மலேரியா காய்ச்சல் பரவி வருகிறது இதற்கான மாத்திரைகள் மட்டுமே தற்பொழுது வழங்கப்பட்டு வருகின்றன ஆனால் இரத்தப் பரிசோதனை செய்யப்படுவதில்லை. (இ-108)

## பரிசளிப்பு விழாவும் புதிய கட்டடத் திறப்பு விழாவும்

யாழ்ப்பாணம், மார்ச் 3

யாழ் இந்து ஆரம்ப பாடசாலைப் பரிசளிப்பு விழாவும் புதிய கட்டடத் திறப்பு விழாவும் நாளை 4 ஆம் திகதி நடைபெறும்.

அதிபர் மு. திருஞான சம்பந்தபிள்ளை தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் யாழ் பிரதம கல்வியதிகாரி திரு. கே. கந்தசாமியும் கலாநிதி பார்வதி கந்தசாமியும் பிரதம விருந்தினராகவும், வட்டாரக் கல்வி அதிகாரி திரு. சு. சிவநாயகமூர்த்தி சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்கின்றனர். (இ)

## மக்கள் முகம்

### ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம்

அச்சுவேலி, மார்ச் 3

ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக புதுவருட நிர்வாகிகள் தெரிவு அண்மையில் நடைபெற்றது.

புதுவருட நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டோர் விபரம்:-

தலைவர்: திரு. செ. சுகுணதாஸ், உப தலைவர்: திரு. க. நகுலேஸ்வரன், செயலாளர்: திரு. வ தர்மராசா, உப செயலாளர்: திரு.வ.பேரின்பராசா, பொருளாளர்: திரு பொ. மகேசன். விளையாட்டுக் குழுக் கப்டன் செல்வன் ஆ. நவநீதன்.

6 பேர் கொண்ட செயற் குழுவும் தெரிவு செய்யப்பட்டது. (இ-11)


## பிரயாண ஒழுங்குகள்

● டுபாய் ● ஓமான் ● சவூதி அரேபியா

போன்ற நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகள் தொழிலாளர்களுக்கு மட்டும் (Labourers only) உடனடியாகச் செய்து தரப்படும்.

பாஸ்போட், 7 படங்களுடன் உடன் தொடர்பு கொள்ளவும்

கொழும்பு முகவரி:

Construction & Development Ltd.
37, Jeyasingha Mawatthe,
Nugegoda.

கிளை:
V. P. பாலா
C/o.N.V. பொன்னுத்துரை,
பாடசாலை ஒழுங்கை,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

யாழ்ப்பாண முகவரி:
V. P. பாலா
"திருமகலம்"
இடைக்காடு,
அச்சுவேலி.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

இன்று செய்யக் கூடியதை நாளைக் கெனப் பின்போடாதே. நீயே செய்யக் கூடியதற்கு பிறரை ஏவக் கொள்ளாதே.

—ஜெபர்சன்

உதயன்

இல, 15, கஸ்தூரியார் வீதி... தொலைபேசி: 24805
மின்சார நிலைய வீதி, 22073
யாழ்ப்பாணம் 03-03-1987 த.பெ இல. 88

# நெருக்கடியிலும் கல்வி

கல்வித் துறையில் குழப்பம். திட்டமிடப் படாத கல்விமுறை மாணவரின் ஆளுமையை வளர்க்க உதவாத கற்பித்தல் முறை கல்வித் துறைக்கு ஏற்பட்டிருக்கும் வேண்டாத தலையிடிகள். தமிழ் மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டு வருதல்.

இவைகுறித்தும், இன்னும் இவை சம்பந்தமான உள் அம்சங்கள் குறித்தும் யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் விவரமாக விளக்கி இருக்கிறார்.

இணுவில் சைவப்பிரகாச மகாவித்தியாலயப் பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே துணைவேந்தர் கல்வித்துறை பாழாவது குறித்துப் பல முக்கிய அம்சங்களை எடுத்துரைத்திருந்தார்.

எதிர்காலப் பிரசைகளின் கல்வி நலனில் அக்கறை உள்ள ஒவ்வொருவரும் துணைவேந்தர் தெரிவித்த சகல அம்சங்களையும் கருத்தில் கொள்ளுதல் அவசியம்

✶ ஆரம்பக் கல்வி பெறுவோர் விகிதாசாரம் தமிழ் மக்களிடையே வீழ்ச்சி அடைந்துள்ளது. அதனைத் தடுக்க கிராமப்புறக் கல்வியைக் கிராமப்புறப் பாடசாலைகளை வளர்த்து எடுக்கவேண்டும்.

✶ இக்கட்டான காலகட்டங்களில் கற்க முடியாது. மனதை ஒருமுகப்படுத்த முடியாது. இவ்வாறான மனோபாவத்தை மாணவர்கள் உடனடியாக மாற்றவேண்டும்.

துணைவேந்தர் பிரஸ்தாபித்த அம்சங்களில் மேற்கண்ட இரண்டைக் குறித்தும் உடனடிக் கவனம் செலுத்தப்படுவது மிக மிக அவசியம்.

அரசியற் சூழ்நிலை காரணமாகத் தமிழ்ச் சிறார்களின் கல்வி வளர்ச்சி பல வகைகளாலும் பாதிக்கப்பட்டிருக்கிறது. இராணுவக் கெடுபிடிகளால் மக்கள் இடம்பெயர்வு, பாடசாலைகள் சேதம், பல பாடசாலைகள் இயங்க முடியாமல் மூடப்படுதல், தமிழர்கள் பலர் அகதிகளானமை. சிறுவர்கள் பலர் அனாதைகளானமை. இப்படிப் பல பாதிப்புகள்.

ஆரம்பக் கல்வி பெறும் தமிழ்ச்சிறார்களின் எண்ணிக்கை 2.6 சதவிதம் திடீரென வீழ்ச்சி அடைய மேற்கண்ட பாதிப்புகளே பிரதான காரணிகள். இன்றுள்ள அரசியற் சூழலில் இவற்றிலிருந்து விடுபடும் உடனடி வாய்ப்புக்குறைவு.

எனினும் எதிர்காலச் சந்ததியினரை கல்வி அறிவில்லாத சமூகமாக வளரவிட முடியாது— வளர விடவுங் கூடாது என்ன தான் கஷ்டங்களும், அழிவுகளும் இடம்பெறினும் அவர்களுக்குக் கல்வி அறிவூட்டுதல் அவசியம்,

ஆரம்பக் கல்வி பெறச் செல்வோர் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்தல் பிரதானமானது. அதற்குக் கிராமப்புறப் பாடசாலைகளை வளர்ப்பது அவசியம். இராணுவம் அழிக்கும் பாடசாலைகளுக்குப் பதிலாக மேலும் பல கொட்டகைப் பாடசாலைகளையேனும் தோற்றுவிக்க வேண்டும் அரசியற் போராட்டத்தில் மட்டுமன்றி. கல்வி வளர்ச்சித் துறையிலும் உறுதி அவசியம். கொட்டகைகள்தான் கட்ட முடியாத கட்டத்திலுங்கூட பொது மண்டபங்கள், பாவனையில் இல்லாத தனியார் விடுகளைக் கல்வி நிலையங்களாக்க வேண்டும்.

அவ்வாறு செய்வதன் மூலமே இடம் பெயர்ந்தவர்களுக்கும் பாடசாலைகளை இழந்தவர்களுக்கும் தொடர்ந்து கல்வி வசதி செய்ய முடியும்

இக்கட்டான காலகட்டங்களில் மனதை ஒரு முகப்படுத்திக் கற்கமுடியாது என்ற மனோபாவத்தை மாற்ற வேண்டும் என்பது துணைவேந்தரின் புத்திமதி.

எந்தக் காரியத்தையும் பருவந் தப்பிச் செய்வதால் உரிய பலன் கிடைப்பதில்லை. கல்வியைப் பொறுத்தவரை படிக்க வேண்டிய இளம் பராயத்தில் உரிய கல்வி அத்திவாரம் இடப்படாவிடில் ஒருவரது அறிவை விருத்தி செய்வது மிகமிகக் கஷ்டம்,

ஆகையால் மாணவர்கள், புறச்சூழலால் ஏற்படும் தாக்கங்களால் தமது கல்வி பாதிப்புற இடம் கொடுத்தலாகாது. நெருக்கடியான புறச்சூழலில் மனதை ஒருமுகப்படுத்திக் கல்வி பயில முடியாது எனப் பழக்கப்படுத்திக் கொண்டால்—

புறச்சூழல் நெருக்கடி வருடக்கணக்காக நீடிக்கும் பட்சத்தில் என்னாகும்? கல்வி அறிவைச் சரிவர, முற்றாகப் பெற முடியாமற் போகும்!

அதன் விளைவாக எதிர்காலத் தமிழர் சமுதாயம் கல்வி அறிவில் பின்னடைந்து போகும். எனவே எந்த நெருக்கடியிலும் தமது கல்வியில் மனதை ஒரு முகப்படுத்தக் கூடிய பழக்கத்தை மாணவர்கள் வளர்த்துக் கொள்வது மிக மிகப் பிரதானமாகும்.

இல்லையேல் பெற்றோர்கள் பெரியவர்களின் முயற்சிகளும் சிரமங்களும் பயனற்றுப் போவதுடன், தமிழர்களின் கல்வித் துறையை இருள் முற்றாகச் சூழ்ந்து கொள்ளும். அறிவொளி அணைந்து அறியாமை கவிந்து விடும்.

ஏழ்மையிலுங்கூடக் கல்வியே கருந்தனம் என்று கருதிக் கஷ்டப்பட்டும் கற்றதனாலேயே இப்போதும் தமிழர் சமூகம் அத்துறையில் தலை நிமிர்ந்து நிற்க முடிகின்றது. இதனை இளம் சந்ததியினர் மறந்து விடலாகாது. கஷ்டத்திலும் கல்வி, நெருக்கடியிலும் கல்வி என்ற நிலை தேவை எப்போதுமே கல்விக்கு முக்கியத்துவம் தரல் வேண்டும்.

## ஐ.நா. உயர் பதவியை வெங்கடேஸ்வரன் நிராகரித்தார்!

சென்னை, மார்ச் 2

ஐ.நா வில் இருந்து வந்த அழைப்பை முன்னாள் இந்திய வெளியுறவுச் செயலாளர் திரு ஏ. பி. வெங்கடேஸ்வரன் நிராகரித்து விட்டார்.

ஐ நா அமைப்பில் உயர் பதவி ஒன்றை ஏற்கும்படி திரு. வெங்கடேஸ்வரனுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது

இதேவேளை வெளியுறவுச் செயலர் பதவியை இராஜினாமாச் செய்த திரு. வெங்கடேஸ்வரனுக்கு அரசில் உயர் பதவி ஒன்றை வழங்க பிரதமர் ராஜீவ் காந்தியும் முன்வந்தார் எனக் கூறப்படுகிறது.

தனது எண்ணத்தை நேரே திரு.வெங்கடேஸ்வரனிடம் ராஜீவ் காந்தி தெரிவித்திருந்தார்.

"என் மீது நாட்டு மக்களுக்கு நல்லெண்ணம் இருந்தால் அதுவே போதும். வேறு பதவிகள் வேண்டாம். அந்த சந்தோஷத்துடன் நண்பர்களாகப் பிரிவோம்–" இப்படி திரு. வெங்கடேஸ்வரன் பிரதமரிடம் வெட்டு ஒன்று துண்டு இரண்டாகத் தெரிவித்து விட்டார்.

சென்னையில் புதிதாகக் கட்டப்பட்டு வருகிற வீட்டில் திரு. வெங்கடேஸ்வரன் தம்பதிகள் குடியேற இருக்கின்றனர். (ஒ-ஈ)

## பாகிஸ்தான் விஞ்ஞானி கருத்து

இஸ்லாமாபாத், மார்ச். 2

பாகிஸ்தானிடம் தற்பொழுது அணுகுண்டு இருப்பதாகவும் அந்நாட்டிற்கு எதிராக அச்சுறுத்தல் விடுக்கப்பட்டால் அதனை உபயோகிக்க தயங்காது எனவும் பாகிஸ்தானின் அணு சக்தி விஞ்ஞானி ஒருவர் தெரிவித்தார்.

இஸ்லாமாபாத்திலுள்ள யூரேனியம் ஆய்வு கூடத் தலைவர் டாக்டர் அப்துல் காதர்கான் இதனை லண்டனில் அளித்த பேட்டியில் தெரிவித்தார். (ஒ)

## தாய்லாந்தில் ஜனநாயகம் இல்லை

பாங்கொக் மார்ச் 2

தாய்லாந்தில் ஜனநாயக முறை திறம்படச் செயல்படவில்லை எனத் தாம் கருதுவதாக மன்னர் பூமிபால் அதுல்யாதேஜ் தெரிவித்தார் மேற்கு நாட்டுப் பாணியில் ஜனநாயகம் அமைவதே இதற்குக் காரணம் எனவும் இதே காரணத்திற்காக சோசலிசமும் தாய்லாந்திற்கு உகந்ததாக இருக்காது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஒ)

## ஈரான் மீது புகார்

பக்தாத், மார்ச் 2

டெஸ்ராவில் ஈராக்கிய நிலைகளை ஈரான் தாக்கியிருப்பது ஈரானிய நகரங்கள் மீது குண்டுவீசுவதில்லை என்ற ஒப்பந்தத்தை மீறுவதாக உள்ளது.

இவ்வாறு ஈராக் குற்றம் சாட்டியுள்ளது.

ஈரானிய தாக்குதல்கள் தொடர்ந்தால் மேலும் தீவிர குண்டுத் தாக்குதலை ஈரானின் நகரங்கள் மீது ஈராக் மேற்கொள்ளும் எனவும் எச்சரிக்கப்பட்டது.

பஸ்ராவில் தீவிர மோதல்கள் நடந்து ஈராக்கின் முக்கிய நிலையம் ஒன்று ஈரான் வசமானதைத் தொடர்ந்தே இந்த எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

# எல்லைத் துருப்புக்கள் 17 நாட்களில் விலகும்

## இந்தியா - பாக். உடன்பாடு

இஸ்லாமாபாத் மார்ச் 2

இந்திய — பாகிஸ்தான் எல்லைப்பகுதிகளிலிருந்து 17 நாட்களுக்குள் தத்தமது துருப்புக்களை விலக்கிக் கொள்ள இரு நாடுகளும் சம்மதித்துள்ளன.

பாதுகாப்பு அதிகாரிகளும், தேவையேற்படின் எதிர்த்தாக்குதலை நடத்தவும் என இவ்விரு நாடுகளும் மேலதிகமாக நிலை நிறுத்திய சகல இராணுவ அணிகளும் 15 நாட்களில் இதன்மூலம் விலக்கிக் கொள்ளப்படவுள்ளன.

ராஜஸ்தான், இந்து. ஹச். சிரான் ஆகிய மாநிலங்களில் உள்ள சகல மேலதிக ராணுவமும் அகற்றப்படும்.

இந்திய பாகிஸ்தான் வெளிவிவகாரச் செயலாளர்களிடையே இஸ்லாமாபாத்தில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது இம்முடிவு எடுக்கப்பட்டது.

படைகள் விலகுவதை இருசாரப்பினரும் கண்காணிப்பர். (ஒ)

## வெளி உலகில்

## லெபனுன் பிரதமர் போர் நிறுத்த உடன்பாடு

பெய்ரூட், மார்ச் 2

லெபனனின் பன்னிரண்டு வருடகால அமைதியின்மையை முடிவுக்குக் கொண்டுவர முஸ்லிம் தலைவர்களோடு உடன்பாடு ஏற்பட்டுள்ளதாக பிரதமர் அறிவித்தார்.

டமாஸ்கஸில் சிரிய அதிகாரிகளுடனும், ஷியா அமல் இயக்க தலைவர் ரபி மேர்பி, புறாஸ் தலைவர் ஜும்ளா ஆகியோர் உட்பட முஸ்லிம் தலைவர்கள் பலருடன் பேச்சுக்கள் நடத்தியதாக லெபனன் பிரதமர் ராஜஸிட் கராமி தெரிவித்தார்.

அரசியல் சீர்திருத்த நடவடிக்கைகள் பற்றி இச்சந்திப்பில் உடன்பாடு ஏற்பட்டதாம் (ஒ)

## ஆராய்ச்சிக்கு சன்மானம்

புதுவை, மார்ச் 2

சுப்பிரமணிய பாரதியார், பாரதிதாசன் ஆகியோரின் படைப்புக்கள் குறித்து ஆராய்ச்சி செய்பவர்களை ஊக்குவிக்கும் முகமாக புதுவை பல்கலைக்கழகம் சன்மானம் வழங்கவுள்ளது

இந்த ஆராய்ச்சியில் பட்டம் பெறுவோருக்கு 80 ஆயிரம் ரூபா வழங்கப்படும். (ஒ)

## பிலிப்பீன்ஸில் பலத்த மோதல்

மணிலா, மார்ச் 2

பிலிப்பீன்ஸில் இடதுசாரிக் கிளர்ச்சியாளர்கள் பொலீஸாருடனும் ஆயுதப்படையுடனும் மோதியதில் 37 கிளர்ச்சியாளர்கள் கொல்லப்பட்டனர்.

டாலோ பகுதியில் மூன்று கிராமங்களில் உள்ள பொலிஸ் மற்றும் இராணுவப் பிரிவுகள் மீது கிளர்ச்சியாளர்கள் தாக்கினர்.

பொது மன்னிப்பு அளிப்பதாக ஜனாதிபதி கொரஸன் அக்கியூனோ தெரிவித்த யோசனையை நிராகரித்துவிட்டு தாக்குதலைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.

பிலிப்பீன்ஸில் 18 ஆண்டுகளாக நடைபெற்றுவரும் கிளர்ச்சிக்கு ஒரு தீர்வுகாணும் முயற்சியாக ஆறு மாதத்திற்கு முன் சரணடையும் கிளர்ச்சியாளர்களுக்குப் பொது மன்னிப்பு அளிப்பதென அக்கியூனோ சனிக்கிழமை அறிவித்திருந்தார், (ஒ)

### 6 பேருக்கு என வாக்கெடுப்பு நிலையம்

ஸ்ரீநகர், மார்ச். 2

ஜம்மு-காஷ்மீரில் லே மாவட்டத்தில் தும்சாக் எனும்இடத்தில் ஆறு வாக்காளர்களுக்காக மட்டும் என்று வாக்கெடுப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ளது

ஸ்ரீநகரில் செய்தியாளரிடம் இதனைத் தெரிவித்த தேர்தல் அதிகாரி இந்தியாவின் மிக உயர்ந்த இடத்தில் உள்ள வாக்கெடுப்பு நிலையமும் காஷ்மீரில் வடக்கில் அமைக்கப்பட்டிருப்பதாக தெரிவித்தார் (ஒ)

# அரிய நூல்கள் பலவும் வீடுகளில் செல்லரித்தும் கடைகளில் கடலை சுற்றியும் வீணாகும் அவலம்

## நூலகத் திறப்பு விழாவில் உரை

யாழ்ப்பாணம், பெப் 3

பல அரிய நூல்கள் வீடுகளில், கடைகளில் வீணே கிடந்து செல்லரிக்கப்படுகின்றன. பல கிடைத்தற்கரிய நூல்கள் கிழிக்கப்பட்டு கடலை மற்றும் பொதிகள் சுற்றி விற்கப்படுகின்றன.

இவ்வாறு திரு என். குழந்தைவேல் கூறினார்.

ஆனைப்பந்தி உயர் கல்லூரியின் புதிய நூலகத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் நூல்கள் சேகரிக்கும் தினங்களை பிரகடனப்படுத்தி, மாணவர்கள் அரிய, பழைய நூல்களை மக்களிடம் சேகரிக்க வேண்டும்

யாழ்ப்பாணத்தில் மிகப்பழைமை வாய்ந்த பெரிய இரு நூலகங்களான யாழ் பொதுசன நூலகம். பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி நூலகம் என்பன அரசின் திட்டமிட்ட செயல்களால் அழிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் எமது மாணவர்கள் சிறந்த தேவையான நூல்கள் இன்றி அவதிப்படுகிறார்கள்

பலர் தாம் படித்த கல்விக்கு தொடர்பில்லாத வேலையை இப்போது செய்கிறார்கள் இதனால் அவர்கள் பயன்படுத்திய பல அரிய நூல்கள் அவர்கள் வீட்டில் வீணே கிடக்கின்றன.

அவற்றை மாணவர்கள் சேகரித்து நூல் நிலையங்களில் ஒப்படைக்க முன்வர வேண்டும் என்றார்.

மில்க்வைற் அதிபர் சிவதர்மவள்ளல் திரு. க, கனகராசா இந்நூல் நிலையத்தை திறந்து வைத்தார்.

இலங்கைத் தமிழ் வெளிவாரி பட்டதாரி மாணவ ஒன்றியத் தலைவர் திரு. ரி. யோகராசா விழாவிற்கு தலைமை வகித்தார்.

திரு. ச குமாரவேல் திரு. எஸ். மரியதாஸ், திரு. பி. கனகராசா ஆகியோரும் இவ் விழாவில் உரையாற்றினர், (இ-5)

## நிதி நெருக்கடியை சமாளிக்க அரசியல் கட்சிகள் ஒன்று சேர வேண்டும் -ரொனி

கொழும்பு, மார்ச் 3

இன்று ஏற்பட்டுள்ள 'தேசிய நெருக்கடி'யைச் சமாளிக்க அரசியல் கட்சிகள் அனைத்தும் வேறுபாடுகளை விட்டு ஒன்றுபட்டு உழைக்க வேண்டும்.

நிதி அமைச்சர் ரொனி டிமெல் முன்கண்டவாறு வேண்டுகோள் விடுத்தார்.

புளத்சிங்கள தொகுதியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் நிதிஅமைச்சர் மேலும் சொன்னதாவது;

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுவது இழுத்தடிக்கப்படுகிறது. இதனால் நாட்டை ஒரு பெரிய தேசிய நெருக்கடி எதிர் நோக்குகின்றது.

இதனை அரசாங்கத்தினால் மட்டும் சமாளிக்க முடியாது.

சகல அரசியல் கட்சிகளும் தேசியப்பற்றுடன் ஒன்றுபட்டு தேசிய நெருக்கடிக்கு முற்றுப் புள்ளி வைக்க உதவ வேண்டும்.

இப்படி நிதி அமைச்சர் சொன்னார். (இ-ஈ)

## வாசகர் திருமுகம்

### தபால் நிலையமா? மீன்பிடிப் பயிற்சி நிலையமா?

யாழ்ப்பாணம் 2 ஆம் குறுக்குக் கடற்கரை வீதிச் சந்தியில் கடற்றொழில் அமைச்சின் கீழ் உள்ள மீன்பிடிப் பயிற்சி நிலையக் கட்டடத்தில் யாழ் பெரிய தபால் நிலையக் கருமங்கள் யாவும் நடைபெற்று வருகின்றன.

எனினும் அங்குள்ள பெயர்ப்பலகை "மீன்பிடிப் பயிற்சி நிலையம்" என்ற முகவரியுடனேயே இன்னும் காணப்படுகிறது.

தூர இடங்களிலிருந்து வரும் பொதுமக்கள் இதை வேறு இடமெனக் கருதி அலைந்து திரிகிறார்கள்.

ஆகவே இது விடயத்தில் தபால் அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும்.


இங்ஙனம்,
வி. பிரான்சிஸ்
யாழ்ப்பாணம்.

### வாலிபர் முன்னணி மாநாடு

கொழும்பு. மார்ச் 3

லங்கா சமசமாஜக் கட்சி வாலிபர் முன்னணியின் 14 ஆவது வருடாந்த மாநாடு இம்மாதம் 7 ஆம் 8 ஆம் திகதிகளில் கொழும்பு புதிய நகரசபை மண்டபத்தில் நடைபெறும். (உ-ஏ)

## பொய்யாமொழி



**குறள்:**

ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து.

**பொருள்:**

ஒரு பிறப்பில் தான் கற்ற கல்வியானது அப் பிறப்பிற்கு மட்டும் அல்லாமல் ஒருவனுக்கு ஏழுபிறப்பிலும் உதவும் தன்மை உடையதாகும்.

## செய்திக்கொத்து

### பிறமாவட்ட மாணவர் விவரம்

மானிப்பாய், மார்ச் 3

பிற மாவட்டங்களில் இருந்து அகதிகளாக வந்து யாழ்ப்பாணப்பாடசாலைகளில் கல்வியிலும் மாணவர்கள் பற்றிய விவரத்தைத் திரட்டும் பணியில் யாழ்ப்பாணம் திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் திரு. தி. துரைசிங்கம் ஈடுபட்டுள்ளார். (இ-90)

### மேல்வகுப்புகளை நடத்த அனுமதி

முள்ளியவளை, மார்ச் 3

சிலாவத்தை றோமன் கத்தோலிக்க அரசினர் தமிழ்க்கலவன் வித்தியாலயத்தை இவ்வருடம் தொடக்கம் கல்வி அமைச்சு தரம் உயர்த்தி மேல் வகுப்புகளையும் நடத்த அனுமதி அளித்துள்ளது (இ-93)

### படுகாயமுற்றவர் மரணமானார்

அச்சுவேலி, மார்ச் 3

கடந்த வெள்ளிக்கிழமை காலையில் அச்சுவேலி கொலனியன் தாவில் ஹெலிக் தாக்குதலுக்கு இலக்காகி யாழ் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த அச்சுவேலி நாவற்காட்டைச் சேர்ந்த திரு. கதிரவேல் தெய்வலிங்கம் என்ற 27 வயது வாலிபன் சனிக்கிழமையன்று மரணமானார்.

தோட்ட வேலை செய்துவிட்டு வீடு திரும்புகையில் இவர் ஹெலித்தாக்குதலுக்கு இலக்கானார். சமதரையான இடத்தில் கீழ் இறங்கிய ஹெலியில் இருந்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் தெய்வலிங்கம் படுகாயமடைந்தார். (உ-11)

### ஆசிரியர் பற்றுக்குறை

கன்னாகம், மார்ச் 3

யாழ் மாவட்ட பாடசாலைகளில் ஒன்றான சங்குவேலி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் ஆசிரியர் பற்றுக்குறை ஏற்பட்டுள்ளது,

ஏற்கனவே இடமாற்றம் பெற்ற ஓர் ஆசிரியருக்கு பதிலாக வேறு ஒருவர் இன்னும் நியமிக்கப்படவில்லை.

இந்த நிலையில் இம் மாதத்திலிருந்து மேலும் ஓர் ஆசிரியருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது குறித்து பாடசாலை வட்டாரங்களில் ஆச்சரியம் தெரிவிக்கப்படுகிறது. (இ-27)

## சமய நிதிகளில்

### மாசி மக இலட்சார்ச்சனை

சுன்னாகம், மார்ச் 3

நாளை புதன்கிழமை தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் மாசிமக இலட்சார்ச்சனை ஆரம்பமாகிறது.

தொடர்ந்து பத்துதினங்கள் இலட்சார்ச்சனை நடைபெற்று 14 ஆம் திகதி சனிக்கிழமை கலசாபிஷேகம் நிறைவும் தீர்த்தையில் அருள் இடைக்கப்பெற்றுள்ளது.

இப் பெருவிழாவில் தேவஸ்தானத்தில் கூடவுள்ள பக்தர்களின் செளகரியங்களை தெல்லிப்பளை இந்து இளைஞர் சபை ஒழுங்குகளைப் பூர்த்தி செய்துள்ளது. (இ-27)

### குடிதண்ணீர் பிரச்சினை தீர்வு

யாழ்ப்பாணம், மார்ச் 3

நயினாதீவு மகாவித்தியாலயத்தில் நிலவிய குடிதண்ணீர்ப் பிரச்சினை தீர்த்து வைக்கப்பட்டுள்ளது.

அங்கு அதிபராக இருந்து சிறந்தசேவையாற்றி மறைந்த திரு. வேலுப்பிள்ளை விசுவலிங்கம் ஞாபகார்த்தமாக அவரது துணைவியார் திருமதி கமலாதேவி விசுவலிங்கம் புதிய நன்னீர்க் கிணறு ஒன்றைத் தோண்டுவித்துக்கொடுத்துள்ளார். (இ)

### தையல் பயிற்சி நிலையம்

வேலணை, மார்ச் 3

புங்குடுதீவு பெருங்காடு மாதர் அபிவிருத்திச் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் தையல் பயிற்சி நிலையத்தில் இந்த வருடத்துக்கான புதிய தையல் வகுப்புகள் ஆரம்பமாகியுள்ளன. தற்பொழுது 30 மாணவிகள் இப் பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டு பயிற்சிபெற்று வருகின்றார்கள்.

இப்பயிற்சிகளை ஆசிரியர் செல்வி கே. நிர்மலாதேவி வழங்கி வருகின்றார். (இ-167)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**O/L பிரிவு I**
DAY CLASSES
ஆரம்பம்: 9 - 3 - 87
தினசரி காலை 8-00 முதல் 1-30 வரை
* அனுபவமிக்க ஆசிரியர்கள்
* சகல பாடங்களும் நடைபெறும்
* முற்றிலும் பாடசாலைவசதி
கொண்டவை.
**Niru Tuition Centre**
KONDAVIL



# உதயன்

03 - 03 - 1987 செவ்வாய்க்கிழமை



**A/L 89 விஞ்ஞானம்**
ஆரம்பம்: 9 - 3 - 87
பௌதிகம்: — சௌந்தி 5-00 6-00
இரசாயனம்: — செல்வா 4-00 -- 5-00
விலங்கியல்: -- ஞானம்
தாவரவியல் — பாலா
தூய, பிரயோக கணிதம் - A பதமநாதன்
**Niru Tuicion Centre**
KONDAVIL.


## ஸ்கந்தாவிற்கு 2 போட்டிகளில் வெற்றி தோல்வி இல்லை

யாழ்ப்பாணம், மார்ச் 3
சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கிரிக்கெட் அணி விளையாடிய இரண்டு ஆட்டங்கள் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்திருக்கின்றன.

**கொக்குவில் இந்து**

கொக்குவில் இந்துக் கல்லூரி அணிக்கும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணிக்கும் இடையேயான கிரிக்கெட் போட்டி வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்த சினேகபூர்வ போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்து அணி 239 ஓட்டங்களைப் பெற்றது.

கோகுலன், மதிதரன், மோகன் ஆகியோர் முறையே 62, 50, 43 ஓட்டங்களைப்பெற்றனர்.

ரவிகுலன் 43 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

தொடர்ந்து ஆடிய ஸ்கந்தவரோதயா அணி தனது முதல் இன்னிங்ஸில் 140 ஓட்டங்களைப் பெற்றது.

சுரேஸ்நாதன், ரூபின்சன், சரவணபவானந்தன் ஆகியோர் முறையே 39, 30, 11 ஓட்டங்களைப் பெற்றனர்.

செல்வாதரன் 41 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்து அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 112 ஓட்டங்களைப் பெற்றதும் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

இராமச்சந்திரன் 18 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

ஆட்ட நேர முடிவின் போது ஸ்கந்தவரோதயா அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 83 ஓட்டங்களைப் பெற்றது.

சரவணபவானந்தன் 26 ஓட்டங்களையும் இராமச்சந்திரன், நிரஞ்சன் ஆகியோர் தலா 17 ஓட்டங்களையும் பெற்றனர்.

மதிவண்ணன் 58 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

தொடர்ந்து ஆடிய மகாஜனா அணி 49 ஓட்டங்களுக்கு தனது சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

சுரேஸ் ஆட்டமிழக்காமல் 14 ஓட்டங்களையும், சுபேசன் 34 ஓட்டங்களையும் பெற்றனர்.

### பாடசாலைகளின் கிரிக்கெட் மோதல்கள்

...மச்சந்திரன் 22 ஓட்டங்களையும் பெற்றனர்.

**மகாஜனா**

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக்கல்லூரி அணிக்கும் தெல்லிப்பளை மகாஜனா கல்லூரி அணிக்கும் இடையில் நடைபெற்ற சினேகபூர்வ கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் ஸ்கந்தவரோதயா அணி முதலில் துடுப்பெடுத்தாடி 174 ஓட்டங்களைப் பெற்றது.

சரவணபவானந்தன் ... இராமச்சந்திரன் 13 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும்: ரவிகுலன் 18 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்ப்பதற்கு 125 ஓட்டங்களை எடுக்க வேண்டிய நிலையில் இரண்டாவது இன்னிங்ஸிற்காக ஆடிய மகாஜனா அணி 4 விக்கெட்டுகளை இழந்து 63 ஓட்டங்களைப் பெற்ற போது நேரமின்மையால் ஆட்டம் நிறுத்தப்பட்டது.

(உ-7)

## மூதூரில் 3 நாள் தேடுதலில் 22 தமிழர் பலி

திருகோணமலை, மார்ச் 3
கடந்த மாதம் தொடர்ந்து மூன்று நாட்கள் மூதூர்ப் பிரதேசத்தில் ஆயுதப் படையினர் நடத்திய தேடுதல் நடவடிக்கையின் போது 22 தமிழ்ப் பொதுமக்கள் சுட்டும் வெட்டியும் கொல்லப்பட்டனர்.

வீடுகள் சேதமாக்கப்பட்டன. பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்டனர்.

கடந்த 16,17,18 ஆம் திகதிகளில் இச்சம்பவங்கள் இடம்பெற்றன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பச்சநூர் என்ற கிராமத்தில் உள்ள தேவாலயத்தினுள் வைத்து நால்வர் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்த நான்கு பேரும் அந்த தேவாலயத்தில் பணிபுரிபவர்கள் என்று தெரியவருகிறது.

மல்லிகைத் தீவுச் சந்தியில் வைத்து 6 தமிழர் வெட்டிக் கொல்லப்பட்டனர். சம்பூர்க் கிராமத்தில் 12 தமிழர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

ஆனால் திருகோணமலை பிரசைகள் குழுவுக்கு உயிரிழந்தவர்களின் 14 பேரின் பெயர்கள்தான் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**உயிரிழந்தோர்**

உயிர் இழந்தவர்களின் விபரம் வருமாறு:

1. சறப்பியான் பேனடிக்ற், (55 வயது) இருதயபுரம்
2. செல்லையா தியாகராசா (52 வயது) இருதயபுரம்
3. கருப்பையா இராசலிங்கம் (35 வயது) இருதயபுரம்.
4. தருமலிங்கம் ரவி (21 வயது) இருதயபுரம்
5. கைலிங்கம் குணநாயகம் (27 வயது) கட்டைபறிச்சான்
6. நமசிவாயம் சிவஞானமூர்த்தி (28 வயது) கட்டைபறிச்சான்
7. ஐயாத்துரை ஆனந்தராசா (30 வயது) கட்டைபறிச்சான்
8. குமாரசாமி பூரணசிங்கம் (23 வயது)சம்பூர்
9. இராமசாமி வேலாயுதம், (39வயது)சூடைக்காடு
10. கணபதிப்பிள்ளை ஜோகராசா, (28 வயது) சூடைக்காடு
11. கே. பொன்னன் (55 வயது) இலங்கைத் துறை
12. காத்தமுத்து மகேந்திரராசா (28 வயது) சம்பூர் அகதி முகாம்
13. வைரமுத்து சுப்பிரமணியம், (வயது 37), சம்பூர் அகதி முகாம்
14 காளிராசா மாரிமுத்து, (வயது 40), சம்பூர் அகதி முகாம்

**வீடுகள் சேதம்**

இதேவேளை தேடுதலின் போது சூடைக்காடு என்னும் இடத்தில் சுமார் 25 வீடுகளும் சம்பூரில் 18 வீடுகளும் சேதமாக்கப்பட்டன சம்பூர் அகதிகள் முகாமில் தங்கியிருந்த அகதிகளின் சமையல் பாத்திரங்கள் கூட அடித்து நொருக்கப்பட்டுச் சேதமாக்கப்பட்டன;

இப்பகுதியில் கைது செய்யப்பட்ட 200க்கு அதிகமான தமிழர்களில் கடந்த மாதக் கடைசி வாரம் வரை 95 பேரே விடுவிக்கப்பட்டனர்.

ஏனையோர் தீவிர விசாரணையின் பின்னரே விடுவிக்கப்படுவர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது

மூதூர் பிரசைகள் குழுத் தலைவர் திரு இ எம். கனகசபை பாதிக்கப்பட்ட இடங்களுக்குச் சென்று முழு விபரங்களையும் திரட்டி வருகிறார்.

பச்சநூரில் தேவாலயத்தில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்ட நான்கு தமிழ் ஊழியர்கள் பற்றி மூதூர்ப் பிரசைகள் குழு மேலிடத்துடன் தொடர்பு கொண்டதைத் தொடர்ந்து, மரண விசாரணைகள் நடத்தப்பட்டன

இச் சம்பவம் நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக மூதூர் பிரசைகள் குழுத் தலைவர் திரு கனகசபை உதயன் செய்தியாளரிடம் தெரிவித்தார். (உ-எ-150)

### பிரசைகள்...

(1ஆம் பக்க தொடர்ச்சி)
...கோஷ்டி அலுவலகத்தில் தேடுதல் நடத்தியது.

அலுவலகத்தின் பல இடங்களில் தரையில் பிக்கானினால் (Pick-axe) கோஷ்டியினர் தோண்டிப் பார்த்தனர்.

பின்னர் வீட்டில் இருந்த குழுவின் பொருளாளர் திரு. இ. கணேசலிங்கத்தை விசாரணைக்கு இக்கோஷ்டி அழைத்துச் சென்றது.

குழுத் தலைவர் திரு. சிவபாலனின் மைத்துனர் திரு. கணேசலிங்கம்.

திருமலை பிரசைகள் குழு இச்சம்பவம் பற்றி இணைப்பதிகாரியிடம் முறையிடப்பட்டதைத் தொடர்ந்து திரு. கணேசலிங்கம் பின்னர் விடுவிக்கப்பட்டார்.

(உ-எ-150)

### ஈழ விடுதலை...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)
களை அங்கீகரிக்கும் ராஜதந்திர நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதே அந்த ராஜதந்திர பயமுறுத்தல் என்று அறியப்படுகிறது

இதனைத் தொடர்ந்தே ஜனாதிபதி ஜெயவர்த்தனா சகல அரசியல் கட்சித் தலைவர்களையும்அழைத்து அவசர அவசரமாகப் பேச்சுக்களை நடத்தினார்.

பேச்சுக்களில் கலந்து கொண்ட கட்சித் தலைவர்கள் "உடனடியாக அரசியல் கட்சிகள் மாநாட்டைக் கூட்டுங்கள்"-என்று ஜனாதிபதியைக் கேட்டுள்ளனர்.

மாலைதீவுப் பயணத்தை முடித்துக் கொண்டு திரும்பிய பின்னரே, ஜனாதிபதி ஜெயவர்த்தனா, அரசியல் கட்சிகள் மாநாட்டைக் கூட்டுவதா இல்லையா? அல்லது வேறு என்ன நடவடிக்கை எடுப்பது? என்பன குறித்து தீர்மானிப்பார் என்றும் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன

(அ-எ)

### ஜே. ஆரின்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)
நீண்டகாலமாக துன்பம் அனுபவித்து வரும் தமிழர்களுக்கு இன்று பயமுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

தமிழர்களின் பலன் தாமும் எதிர்த் தாக்குதலை ஒழித்துக்கட்டுவதே இந்தப் பயமுறுத்தல்.

இந்தப்பயமுறுத்தலின் தற்போதைய கருத்து ஏறக்குறைய தமிழீழ விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் வெல்வது. பின்னர் தனித்து விடப்பட்ட தமிழ் மக்களை முற்றாக அடக்கி ஆள்வது.

இப்படி அத்தலையங்கத்தில் மேலும் கூறப்பட்டுள்ளது (உ-எ)

### ஜே. ஆர்-சிறி..

(1-ம் பக்கத்தொடர்ச்சி)
பண்டாரநாயக்காவும் அவரின் குழுவினரும் எழுப்பிய சந்தேகங்களுக்கு ஜனாதிபதி விளக்கம் அளித்தார்

அரசியல் கட்சி ... அரசியல் ... ஆலோசனைபோது சமுகமளித்து இருந்தார்.

(உ-எ)

### அடகு நகை---

(1-ம் பக்கத்தொடர்ச்சி)
காப்பு அதிகாரிக்கும் உத்தரவிடப் பட்டிருக்கிறது

இந்தஉத்தரவு குறித்து மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளருக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளேன்.

அடகு வைத்தோரின் முக்கிய கோரிக்கை செயற்படுத்த முழு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

வட்டி சம்பந்தமான விடயம் குறித்து அவர்கள் வங்கி மேலதிகாரிகளுடன் கலந்துரையாடி முடிவெடுக்க ஒரு கூட்டத்திற்கும் ஏற்பாடு செய்துள்ளேன்

ஆகவே செயலகத்தில் —எமது மக்களுக்காக நிறைவேற்றப்பட வேண்டிய அவசர வேலைகளைச் செய்வதற்காக மறியல் போரைக் கைவிடும்படியும்—

சகல செயலக ஊழியர்களை வேலைக்கு திரும்பும் படியும் —

செயலிழந்த அரச அலுவலகங்களை மீண்டும் மக்கள் சேவையில் ஈடுபடவேண்டும் எனவும் கோருகிறேன்.

பொதுமக்கள் நன்மை கருதி அடகுவைத்தோர் எனது கோரிக்கையை ஏற்றுக் கொள்வார்கள் என நம்புகிறேன் (உ)

### அடகு வைத்---

(1-ம்பக்கத் தொடர்ச்சி)
அடகு வைத்தோர் சங்கப் பிரதிநிதிகள். தங்கள் நகை விஷயம் 90 வீதம் சரிவந்த படியால் இன்னும் இரண்டுநாள் அவகாசம் தரும்படியும்—

அதன்பிறகும் தங்கள் நிலை சரிவராவிட்டால் உங்கள் போராட்டத்தை நடத்துங்கள் என்றும் கேட்டுக்கொண்டதற்கிணங்க ஒய்வூதியர்கள் கச்சேரியை விட்டு வெளியேறினர்கள்.

ஒய்வூதியர்கள் சகலரும் மீண்டும் வெள்ளிக்கிழமை (6 ஆம் திகதி) யாழ்-புகையிரத நிலயத்தில் கூடும்படி கேட்கப்படுகின்றனர்.

(உ-10)


**நீத்தார் பட்டியல்**

### திருமதி துரைஐயா சிவக்கொழுந்து

கொக்குவிலைச் சேர்ந்த துரைஐயா சிவக்கொழுந்து 28-02-87 அன்று காலமாகிவிட்டார். இவர் துரைஐயாவின் அன்பு மனைவியும் பரமேஸ்வரி, பவளம், விஜயரட்ணம் (மனேஜர்-மரக்காலை, கோண்டாவில்) தையல்நாயகி, சரோஜினிதேவி (பொட்ஸ்வானா) மகாலிங்கம் (மினி றேட் உரிமையாளர்) பாலரஞ்சித் (லண்டன்) ரஞ்சித் குமார் (ஜப்பான்) ஆகியோரின் அன்புத் தாயாரும், அம்பிகையபா. காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம், தயானந்தன் (D E. மன்னார்) நடராஜன் (பொட்ஸ்வானா), லிங்காதேவி, குவிலா, சந்திரா (லண்டன்), லிங்கேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும், ஈஸ்வரன், கிரிதரன் (நோர்வே) ஆகியோரின் அன்புப் பேத்தியாருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் கொக்குவில் மேற்கு (சொர்ணவடலி) இல்லத்தில் நடைபெற்று 3 3 87(இன்று) செவ்வாய்க்கிழமை பி. ப 4-00 மணிக்கு கோம்பையன்மணல் மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:- து. மகாலிங்கம் (மினி றேட் சென்ரர்)
சொர்ணவடலி,
கொக்குவில் மேற்கு.
கொக்குவில்.



### 31ஆம் நாள் நினைவஞ்சலி



**பொன்னையா -- கணேஷ்**
(வல்வெட்டி)

தோற்றம்: 23 8 - 1932 மறைவு: 01 - 02 - 1987

அன்புடன் பழகி ஆர்வமுடன் உழைத்தீர். நீர் பெற்ற செல்வங்கள் உயர்வுக்காய் வாழ்நாள் முழுவதும் பாடுபட்டீர். ஆனால், அவர்கள் நல்வாழ்வைப் பார்க்குமுன் இறைபற்றில் வாழ்ந்த எம் குலதெய்வமே! பெற்ற தாய், உடன்பிறப்புக்கள், மனைவி, மக்கள், சுற்றம் நீக்கி இறைவன் அவன் இணையடி அடைந்திட்டான்.

என்செய்வோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கும்—தாய், சகோதரர், சகோதரிமார், மைத்துனர், பெருமக்கள், மருமக்கள், மைத்துனிமார்

— தகவல்: சகோதரன் - தர்மலிங்கம்



### 31-ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

5-3-1987



மண்ணில்: 22 - 1 - 1899
* *
விண்ணில்: 3 - 2 - 1987

**திருமதி தம்பையா மாரிமுத்து**
(நெடுந்தீவு மேற்கு)

அன்பின் திருவுருவாய் பண்பின் சிகரமாய் வாழ்வின் வழிகாட்டியாய் குடும்பத்தின் குலவிளக்காய், குன்றாத அறிவும் பொறுமையின் பொக்கிஷமாய் வாழ்ந்த எம்குல தெய்வமே எங்கள் தாயே. உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம். இறுதிக் கிரியைகளில் கலந்து அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவிக்கிறோம்.

28, சல்மடுநகர், இராமநாதபுரம்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், உற்றார், உறவினர்


### பிரபல கிரிக்கெட் வீரர் தெரிவு

முதல் வார வாக்களிப்பு முடிவுகள்
(நூறு வாக்குகளுக்கு மேல் பெற்றவர்கள்)

| பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|
| 1. பொ. பிரபானந்தன், (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி) | 869 |
| 2. க. டெரிமலன், (யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி) | 332 |
| 3. ஆர் பி சௌந்தரநாயகம், (சென் பற்றிக்ஸ் கல்லூரி) | 313 |
| 4. ஏ. வாகீசன், (சென். ஜோன்ஸ் கல்லூரி) | 295 |
| 5. எஸ். ரவிக்குமார், (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி) | 286 |
| 6. எஸ். நேசகுமார், (சென். ஜோன்ஸ் கல்லூரி) | 271 |
| 7. நிசாட் மோகனதாஸ், (சென். பற்றிக்ஸ் கல்லூரி) | 265 |
| 8. கே. பிரேம்நாத், (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி) | 262 |
| 9. என். நிர்திபரஞ்சன், (யாழ்ப்பாணக் கல்லூரி) | 132 |
| 10. கோகுலன், (கொக்குவில் இந்துக் கல்லூரி) | 113 |
| 11. புவனேந்திரகுமார், (மானிப்பாய் இந்துக் கல்லூரி) | 110 |

* இவ் வாரம் முன்னணியில் திகழும் கிரிக்கெட் வீரரை தெரிவு செய்த அதிர்ஷ்டசாலிகளில் இருவர்:-

1. திரு. சி. பாலசுப்பிரமணியம். 71, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
2. திரு. க. நாகேந்திரன், 548, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

இவர்களுக்கான பரிசுக் காசோலை தலா ரூபா 50/- காலக்கிரமத்தில் நேரடியாக அனுப்பிவைக்கப்படும்.

கிரிக்கெட் போட்டிக் குழு


வடக்கின் மிகப் பிரபல்யமான
பாடசாலை கிரிக்கெட் வீரர் தெரிவு 1987
உதயன் நிறுவனத்தின் ஆதரவோடு
யாழ் ஜொ லிஸ்ராஸ் லியன்ஸ்
விளையாட்டுக் கழகங்கள் இணைந்து நடத்தும்
மிகப் பிரபல்யமான கிரிக்கெட் வீரரை வாசகர்கள் தெரிவு செய்யும் போட்டி



வீரரின் பெயர் ............
கல்லூரி ............
வாக்காளர் பெயர் ............
விலாசம் ............
ஒப்பம் ............



இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி இரண்டாம் ஒழுங்கை 15 ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி 03 - 03 - 1987 தொலைபேசி இல. 24805 22078

Printed and Published by Uthayan Publications (Private) Ltd., 15, Second Lane, Power House Road, JAFFNA.

Registered as a Newspaper at the General Post Office. Under Number QJ / 94 /N /87. Telephone. 24805, 22078



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org